இக் திட்டத் தகவல் பத்திரம் (PDS) அதன் 23 யூன் 2015 திகதியிடப்பட்ட ஆங்கிலப் பத்திரத்தின் அடிப்படையில் மொழிபெயர்க்கப்பட்டது.

# திட்டத் தகவல் பத்திரம்

திட்டத் தகவல் பத்திரம் (PDS) திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டம் பற்றிய சுருக்கமான தகவலை உள்ளடக்கியுள்ளது: PDS பணியானது இயங்கும் நிலையில் காணப்படுகிறது, சில தகவல்கள் ஆரம்ப பதிப்பில் உள்ளடக்கப்படுவதில்லை ஆனால் அது கிடைக்கத்தக்க நிலையை அடையும் போது சேர்த்துக்கொள்ளப்படும். உத்தேச கருத்திட்டங்கள் பற்றிய தகவலானது தற்காலிகமானதும் பிரேரிக்கப்பட்டதுமாகும்.

| | |
|---|---|
| **PDS உருவாக்கப்பட்ட திகதி** | – |
| **PDS புதுப்பிக்கப்படுத்தப்பட்ட திகதி** | 27 ஏப்ரல் 2015 |

| | |
|---|---|
| **திட்டப் பெயர்** | ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம்-தொகுதி 1 |
| **நாடு** | இலங்கை |
| **திட்ட/நிகழ்ச்சித்திட்ட இலக்கம்** | 47273-003 |
| **இயல்பு** | அங்கீகரிக்கப்பட்டது |
| **பூகோளவியல் அமைவிடம்** | – |

ஏதேனும் நாடொன்றின் நிகழ்ச்சித்திட்டம் அல்லது மூலோபாயத்தை உருவாக்குதல், ஏதேனும் ஒரு திட்டத்திற்கு நிதியளித்தல், அல்லது பதவியை உருவாக்குதல் அல்லது இந்த ஆவணத்தில் ஒரு குறிப்பிட்ட ஆட்சிபரப்பு அல்லது பூகோளவியல் பிரதேசத்தை மேற்கோள் காட்டி, ஆசிய அபிவிருத்தி வங்கியானது ஒரு ஆட்சிப் பரப்பின் அல்லது பிரதேசத்தின் சட்டம் அல்லது ஏனைய நிலைமைகளுக்கு ஏற்ப தீர்மானங்களை உத்தேசிக்காது.

| | |
|---|---|
| **பிரிவு மற்றும் /அல்லது உப பிரிவு வகைப்படுத்தல்** | போக்குவரத்து |
| **உப பிரிவு** | வீதிப்போக்குவரத்து (நகரம் அல்லாத) |
| **மூலோபாய நிகழ்ச்சி நிரல்** | சுற்றாடலிற்கேற்ப நிகழ்தகவு வளர்ச்சி (ESG)<br>பொருளாதாரத்தை உள்ளடக்கும் வளர்ச்சி (IEG) |
| **மாற்றத்தின் உந்து விசைகள்** | பால்நிலை சமத்துவம் மற்றும் பிரவாகனப்படுத்தல் (GEM)<br>ஆட்சி முறை மற்றும் ஆற்றல் மேம்படுத்தல் (GCD)<br>தனியார் துறை அபிவிருத்தி (PSD) |
| **பால்நிலை முக்கிய வகைகள்** | வகை 2: பயனுறுதி மிக்க பால்நிலை பிரவாகனப் படுத்தல் (EGM) |

## ■ நிதியளித்தல்

| உதவியின் வகை/ நடைமுறை | அங்கீகாரத்தின் இலக்கம் | நிதி வழங்கலின் மூலம் | அங்கீகரிக்கப்பட்ட தொகை (US$000) |
|---|---|---|---|
| கடன் | 3171 | ஆசிய அபிவிருத்தி நிதி | 100,000 |
| – | – | சரி நிரப்புக் கூறு | 18,000 |
| **மொத்தம்** | | | **US$ 118,000** |

## ■ பாதுகாப்பு வகைகள்

பாதுகாப்பு வகைகள் பற்றிய மேலதிகத் தகவலிற்கு, தயவு செய்து பின்வரும் இணையத்தளத்தினைப் பார்க்கவும் http://www.adb.org/site/safeguards/safeguard-categories

| | |
|---|---|
| **சுற்றாடல்** | B |
| **தன்னிச்சையற்ற மீள் குடியேற்றம்** | B |
| **ஆதிவாசிகள்** | C |

## ■ சுற்றாடல் மற்றும் சமூக பிரச்சினைகளின் சுருக்கம்

**சுற்றாடல் நோக்கங்கள்**

தொகுதி 1 நடைமுறையில் இருக்கும் கிராமிய மற்றும் தேசிய வீதிகளைப் புனரமைத்தல் மற்றும் பராமரித்தல் பணி சம்பந்தப்பட்டது. அதனால் B வகையாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நியமமான சூழல் முகாமைத்துவத் திட்டம் (EMP) உட்பட மாகாண மட்டத்தில் திரட்டப்பட்ட ஆரம்ப சுற்றாடல் ஆய்வு (IEE) அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அடுத்து வருகின்ற தொகுதிளில் அரசின் சூழல் பாதுகாப்புத் தேவைகள் மற்றும் ADB யின் பாதுகாப்புக் கொள்கைக் கூற்றுகளிற்கு அமைய வழிநடத்திச் செல்வதற்காக ஓர் சுற்றாடல் ஆய்வு மற்றும் மீளாய்வுக் கணிப்பீட்டு சட்டகம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**தன்னிச்சையற்ற மீள்குடியேற்றம்**

முதலீட்டுத் திட்டத்தினை ஆய்வு செய்யவும் மற்றும் தயாரிப்பதற்கும் வழிகாட்டுவதற்காக ஒரு மீள் குடியமர்த்தல் சட்டகம் தயாரிக்கப்பட்டுள்ளது. தொகுதி 1 இன் கீழ் நிதியளிக்கப்பட்ட திட்ட வீதிகள் நடைமுறையில் இருக்கும் முறையான வழியின் கீழ் முன்னேற்றப்படும். தன்னிச்சையற்ற மீள்குடியமர்த்தல் தாக்கங்கள் எதுவும் இனங் காணப்படவில்லை.

**ஆதிவாசிகள்**

தொகுதி 1 இன் கீழ் எந்த ஆதிவாசிகளும் தாக்கமடைய மாட்டார்கள். முதிலீட்டுத் திட்டத்தினை ஆராய்ந்து தயாரிப்பதற்கு வழி காட்டுவதற்காக ஒரு ஆதிவாசிகள் திட்டமிடல் சட்டகம் தயாரிக்கப்பட்டுள்ளது

## ■ பங்குதாரர் தொடர்பாடல், பங்களிப்பு மற்றும் ஆலோசனை

**திட்ட வடிவமைப்பின் போது**

4,899 ஏண்ணிக்கையான குடும்ப மதிப்பீடுகள் (திட்ட வீதிகள் நீளத்திற்கு கிட்டத்தட்ட 38% ஆன குடும்பங்கள் உள்ளன), மற்றும் பொது இடங்களில் உள்ள 14 எண்ணிக்கையான கவனக் குழுக்களுடனான கலந்துரையாடல் உட்பட கருத்து நிறைந்த ஆலோசனைகள் மற்றும் சமூக ஆய்வுகள், சகல திட்ட வீதிகள் நெடுக நடாத்தப் பட்டன. திட்டத்தினைப் பற்றிய விழிப்புணர்வினைக் கூட்டுவதற்காக, மற்றும் மக்களின் தேவைகளையும் அக்கறைகளையும் தெரிந்து கொள்வதற்காகவும் கிடைக்கும் நன்மைகளை பெருக்குவதற்காகவும் எதிர்மறைத் தாக்கங்களை குறைப்பதற்காகவும் சமூகப் பங்குபற்றல் மேற்கொள்ளப்பட்டது. சமூகக் குழுக்கள் இனங் காணப்பட்டு திட்டம் தயாரிக்கும் பொழுது ஆலோசனைகள் பெறப்பட்டது. கிராமிய வீதிகளிற்கான வடிவமைப்பு பற்றிய முடிவை எடுப்பதற்கான விரிவான சமூக ஆலோசனை வழிகாட்டிகள் தயாரிக்கப்பட்டு திட்டம் தயாரிக்கப்படும் பொழுது முன்னோடியாக செயற்படுத்தப்பட்டது; வறிய மற்றும் இலகுவில் பாதிப்படையும் மக்களின் பங்கேற்பு இதனால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**திட்ட அமுலாக்கலின் போது**

கிராமிய வீதிப் பகுதிக்கு முக்கியமாக (i) அதிகரித்த வீதிப் பாதுகாப்பு (ii) சுற்றாடல் தாக்கங்களைக் குறைத்தல் மற்றும் (iii) கட்டுமானக் தாக்கங்களைக் குறைத்தல் சம்பந்தமாக வீதி வடிவமைப்பு பற்றி முடிவெடுக்க சமூக பங்குபற்றல் முறைகள் பாவித்தல் உட்பட தொடர் ஆலோசனைகள் முழு நிறைவேற்று காலத்திலும் பெறப்படும்.

குறைகள் தீர்க்கும் பொறிமுறையொன்று திட்டப் பகுதிகளில் அமைக்கப்படும். பல தரப்பட்ட இடங்களின் மூலமாக திட்டத் தகவல்கள் பொதுமக்களிற்கு வெளிப்படுத்தப்படும். சன சமூக அமைப்புகளிற்குத் திட்டத் தகவல்கள் தடையின்றி கிடைக்கப் பெறும். வீதி வடிவமைப்பு முடிவெடுத்தலின் போது திட்ட வீதிகள் நெடுக உள்ள சன சமூக அமைப்புகள் சமூகப் பங்கேற்றலின் ஒரு பகுதியாக ஈடுபடுத்தப்படுவதுடன் குறை தீர்க்கும் ஒரு பொறிமுறையின் ஒரு பகுதியாக இருக்கும். கிராமிய அணுகு கட்டுமானத் தாக்கங்கள், சமூக மற்றும் சூழல் தாக்கம் மற்றும் வீதிப் பாதுகாப்பு போன்ற பிரச்சனைகள் உட்பட வீதிகளின் இறுதி வடிவமைப்பு பற்றி உள்ளூர் சமூகங்களின் (ஆகக் குறைந்தது 40% பெண்கள் உட்பட) ஆலோசனை பெற்றுக் கொள்ளப்படும்.

## ■ விபரம்

குறிப்பிட்ட கால நிதியளிப்பு கோரிக்கை (PFR) யின் கீழ் முன் வைக்கப்பட்ட திட்டத்திற்கான நிதியீட்டல் கோரிக்கை, திட்டம் 1 இன் ஒரு கூறாகும். இது தென் மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படும் மூன்று கூறுகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு திட்டமாகும்: (i) தென்மாகாணத்தில் வீதி முன்னேற்றம்: இந்தக் கூறு 560 km கிராமிய இணைப்பு வீதிகளையும் 130 km தேசிய சாலைகளையும் முன்னேற்றும் மற்றும் / அல்லது பராமரிக்கும். 510 km உள்ளூர் வீதிகள் 50 km மாகாண வீதிகள் உட்பட கிராமிய இணைப்பு வீதிகள் கிராமிய மையங்களிற்கும் நெடுஞ்சாலை வலைப்பின்னலகளிற்கும் இடையில் அமைந்திருக்கும். கிராமிய வீதிகள் சகல கால நிலைகளின் நியமங்களிற்குத் தக்கவாறு முன்னேற்றப்பட்டு மூன்று வருடத்திற்கு பராமரிக்கப்படும். தேசிய சாலைகளும் கிராமிய இணைப்பு வீதிகளும் அருகாமையில் உள்ள சமூக பொருளாதார மையங்களுடன் இணைக்கப்படும். கிட்டத் தட்ட 110 km தேசிய சாலைகள் ஏழு வாருடத்திற்கு வீதிகள் முகாமைத்துவ ஒப்பந்தங்கள் மூலம் முன்னேற்றப்பட்டு பராமரிக்கப்படுவதுடன் மற்ற 20 km தேசிய சாலைக் கூறுகள் கிராமிய இணைப்பு வீதிகளுடன் சேர்த்து மூன்று வருடங்களிற்கு முன்னேற்றப்பட்டு பராமரிக்கப்படும். (ii) ஆற்றல் மேம்படுத்தல்: இப் பாகம் வீதிச் சொத்துக்கள் முகாமைத்துவம், திட்ட முகாமைத்தவம், மற்றும் ஒப்பந்த நிர்வாகம் ஆகிய துறைகளில் வீதிகள் முகவராண்மை முகவர்களின் ஆற்றலைக் கட்டியெழுப்பும். நெடுஞ்சாலைகள், துறைமுகம், மற்றும் கப்பல் துறை அமைச்சு (MOPHS), வீதி அபிவிருத்தி அதிகார சபை (RDA) மற்றும் மாகாண மற்றும் உள்ளூர் வீதி முகவர்கள் வீதி முகவர்களில் உள்ளடக்கப்படுவர். மத்திய, மாகாண, மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் மட்டத்தில் RDA இசைவான வீதிச் சொத்துக்கள் முகாமைத்துவ அணுகு முறை உருவாக்குவதில் முன்னோடியாக விளங்கும். MOHPS மற்றும் RDA தங்களது ஆற்றல் மேம்படுத்தலிற்கும் மற்றும் RDA யிலிருந்து தென் மாகாணத்தில் உள்ள மாகண மற்றும் உள்ளூர் வீதி முகவர்களிற்கு ,வினைத்திறன் மாற்றலிற்கு உதவுவதற்குத் தனியார் ஆலோசனைச் சேவைகள் ஈடுபடுத்தப்படுவர். (iii) திட்டம் தயாரித்தல்: இப் பாகம் தொடர்ந்து வரும் தொகுதிகளிற்கான சாத்தியக் கூற்று ஆய்வு மற்றும் பொறியியல் வடிவமைப்பு என்பவற்றை எடுத்துச் செய்யும். இதன் இலக்கு சப்ரகமுவ மாகாணம், மேல்மாகாணத்தின் களுத்துறை மாவட்டம், மத்திய மாகாணம், வட மேல் மாகாணம் மற்றும் வட மேல் மாகாணம் என்பவற்றில் உள்ள திட்டங்களை உள்ளடக்கும்.

## ■ நாட்டின் / பிராந்திய மூலோபாயத்திற்கான திட்ட அடிப்படைக் கோட்பாடு மற்றும் இணைப்பு நிலை

இலங்கை, ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையில் உள்ள முக்கிய கடல் வியாபார மார்க்கங்களிற்கு அருகே உள்ள ஒரு மூலோபாய நிலையில உள்ளதால் கொழும்பு ஒரு சர்வதேச துறைமுக நகரமாக முன்னேறுவதற்கு சந்தர்ப்பமாக அமைவதுடன் அதன் பின்னர் இந்திய உபகண்டத்தில் இருந்து அல்லது போய்ச் சேரும் சரக்குக் கப்பலகளின் இடைநில் மையமாக முன்னேற இடமளித்துள்ளது. இத் தீவு நாடு அதிகமாக சம மட்டமான அல்லது உருளும் கடற்கரை சம வெளியையும் தெற்கு நடுப்பகுதி மலைகளையும் கொண்டுள்ளது. இலங்கை மக்கள் தொகையின் ஏறத்தாழ 85 வீதமான மக்கள் (2012 இல் 20.3 மில்லியன்) கிராம மற்றும் புற நகரங்களில் வாழ்கின்றனர். மே மாதம் 2009 இல் முடிவடைந்த உள்நாட்டுப் பிணக்கின் பின்னர் இலங்கை ஒரு வலுவான பொருளாதார வளர்ச்சியை அனுபவித்தது. 2010 இலும் 2011 இலும் பொருளாதார வளர்ச்சி 8 வீதத்திலிருந்து 2012 இல் வலுவிழந்த வெளிக் கேள்வி, வறட்சி, மற்றும் வெள்ளம் காரணங்களால் மந்தமடைந்து 6.4 வீதத்தை அடைந்தது; அதன் பின்னர் 2013 இல் 7.3 வீதத்திற்கு மீளுயர்ந்தது. முன்னேற்றமடைந்து வரும் வெளிச் சூழல், அதிகரித்த முதலீடுகள் மற்றும் உள்நாட்டு நுகர்வு மீள்ச்சி போன்ற காரணங்களால் 2014, 2015 காலங்களில் வேகமான நிலைத்தகு பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்தையிள் பொருளாதார வளர்ச்சி கைத்தொழில் மற்றும் சேவைகள் துறையினால் 89 வீதமான மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)யும் அதனைத் தொடர்ந்து விவசாயத்துறை மிகுதி 11 வீதத்தையும் பங்களித்துள்ளது. பலமான வளர்ச்சியின் காரணமாக தேசிய வறிய தலை எண்ணிக்கை வீதம் 2006 இன் 15 வீதத்திலிருந்து 2010 இல் 9 வீதத்திற்கு சிறிது குறைவான மட்டத்திற்கு விழுந்தது. ஆனாலும் குறைந்த மட்ட அபிவிருத்திப் பிரதேசங்கள் தொடர்ந்து அதிக வறுமைக் குறைப்பு நெகிழ்வைக் காட்டவில்லை. (விகிதாசார வறுமை மாற்றம் மொத்த உள்நாட்டு உற்பத்தி அலகொன்றின் வளர்ச்சி

தலை எண்ணிக்கை அலகொன்றிற்கு). குறைபாடுடைய போக்குவரத்து உள்கட்டமைப்பு, முக்கியமாக மாகாண மற்றும் உள்ளூர் அதிகார வீதிகள், பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைவதிற்கும் சமூக வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் முட்டுக்கட்டையாகி விட்டன.

## ■ அபிவிருத்தியின் விளைவு

கிராமிய சமூகங்களிற்கும் சமூக பொருளாதார மையங்களிற்கும் இடையில் முன்னேற்றமடைந்த இணைப்பு

## ■ திட்ட பயன்

| திட்ட பயன் விபரம் | பிரதிபலனின் முன்னேற்றம் |
|---|---|
| திட்ட வீதிகளில் அதிகரித்த போக்குவரத்துச் செயல்திறன் | **தற்போது கணிக்கக் கூடிய காலம் இல்லை** |

## ■ பிரதிபலன்கள் மற்றும் அமுலாக்கலின் முன்னேற்றம்

| திட்ட பெறுபேறுகளின் விபரம் | அமுலாக்கல் முன்னேற்றத்தின் நிலைமை (பெறுபேறுகள், செயற்பாடுகள், மற்றும் பிரச்சினைகள்) |
|---|---|
| 1.தென்மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட கிராமிய சமூகங்களிற்கும் சமூக பொருளாதார மையங்களிற்கும் இடையில் மேம்படுத்தப்பட்ட வீதிகள், 2. கூடிய ஆற்றலுடனான வீதி முகவர்கள் 3. தொடர்ந்து வரும் திட்டங்களிற்கான திட்டங்கள் தயாரித்தல் வேலைகளை முடித்தல். | 16-20 மார்ச் 2015 வரையான காலத்தில் ஆரம்ப பணிநோக்கு நடாத்தப்பட்டது. 30 மார்ச் 2015 அளவில், கிராமிய இணைப்பு வீதிகள் மேம்படுத்தப் பட 9 மரபு வழி வீதி ஒப்பந்தங்களின் பொதிகளிற்கான ஏற்பு கடிதங்கள் வெற்றியடைந்த ஒப்பந்தக்காரர்களிற்கு வழங்கப்பட்டது. கிராமிய இணைப்பு வீதிகள் புனரமைப்பிற்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு விட்டதால் தற்போது தேசிய வீதிப் புனரமைத்தல் மற்றும் பராமரித்தலிற்கான வீதி முகாமைத்துவ ஒப்பந்தங்கள் கொள்வனவு செய்வது ஆரம்பமாகும். PIC 01 (பொதுமக்கள் தகவல் நிலையம்) இற்கான சமர்ப்பணம் 4, 23 ஏப்ரல் 2015 இல், சமர்ப்பிக்கப் பட்டதுடன் ADB (ஆசிய அபிவிருத்தி நிதியம்) தெளிவு படுத்தலிற்கான தனது கோரிக்கையை 24 ஏப்ரல் 2015 இல் அனுப்பி வைத்தது. |
| **அபிவிருத்தி நோக்கங்களின் நிலை** | **செயல்பாடு / கட்டுமானம் நிலைமை** |
| – | – |
| **பொருள் ரீதியான மாற்றங்கள்** | |
| – | |

## ■ வியாபார வாய்ப்புகள்

| | |
|---|---|
| **முதல் பட்டியல் திகதி** | 14 ஆகஸ்ட் 2014 |

**ஆலோசனைச் சேவைகள்**

திட்ட முகாமைத்துவம், ஒப்பந்த நிர்வாகம், மற்றும் ஆற்றல் மேம்பாட்டுத் திட்டங்களில் திட்ட அமுலாக்கல் அலகிற்கு உதவுவதற்காக ஆலோசனைச் சேவை நிறுவனங்கள் மற்றும் தனியார் ஆலோசனைச் சேவையாளர்கள் தேரிவு செய்யப்படுவர். கிராமிய வீதி அபிவிருத்தி, தேசிய வீதி புனரமைத்தல் மற்றும் வீதி வலைப்பின்னல் பராமரிப்பு மற்றும் செயல்பாடுகள் ஆகியவற்றில் உள்ள குடிமுறை வேலைகளிற்காக ஒப்பந்தக்காரரகள் தெரிவு செய்யப்படுவர். ஆலோசனைச் சேவையாளர்களைப் பாவித்தல் முறை பற்றிய ADB யின் வழிகாட்டிக்கமைய (2013, நேரத்திற்கு நேரம் திருத்தப்பட்டதற்கமைய) திட்ட அமுலாக்கல் மற்றும் ஆற்றல் மேம்படுத்தல் என்பவற்றில் உதவுவதற்காக ஆலோசனைச் சேவையாளர்கள் நிறுவனங்களாகவோ அல்லது தனியாராகவோ சேர்த்துக் கொள்ளப் படுவர்

**கொள்வனவு**

திட்ட அமுலாக்கலை விரைவு படுத்துவதற்காக முன்கொணர் ஒப்பந்தம் மற்றும் செயலிற்குப் பிந்திய நிதியிடல் என்பன பாவிக்கப்பட்டு பொதுமுறை வேலைகள் மற்றும் ஆலோசனைச் சேவைகள் கொள்வனவு செய்யப்படும். பொதுமுறை வேலைகள் மற்றும் உபகரணங்கள ADB யின் கொள்வனவு வழிகாட்டிக்கமைய (2013, நேரத்திற்கு நேரம் திருத்தப்பட்டதற்கு ஏற்ப). கொள்வனவு செய்யப்படும். வேலைகள் ஒப்பந்தங்கள் வெளியீடுகள் மற்றும் செயல்பாடு அடிப்படை ஒப்பந்த முறையைப் பாவித்து சர்வதேச அல்லது தேசிய போட்டி ஏல வழிமுறையைக் கடைப்பிடிக்கும். உலக வங்கியால் உருவாக்கப் பட்ட கொள்வனவுப் பத்திரங்களில் ADB யின் தேவைக்கு இசைவான சிறு மாற்றங்களை ஏற்படுத்தி அவை ஏலம் மற்றும் ஒப்பந்த பத்திரங்களாக பாவிக்கப்படும்.

**கொள்வனவு மற்றும் ஆலோசனை அறிவித்தல்கள்**

http://www.adb.org/projects/47273-003/business-opportunities

## ■ நேர அட்டவணை

| | |
|---|---|
| **கோட்பாட்டு ஒத்திசைவு** | – |
| **உண்மை ஆய்வு** | – |
| **முகாமைத்துவ மீளாய்வு கூட்டம்** | 13 யூன் 2014 |
| **அங்கீகாரம்** | 3 ஒக்ரோபர் 2014 |

## ■ முக்கிய நிகழ்வுகள்

| அங்கீகார இலக்கம் | அங்கீகாரம் | கையொப்பம் | வினைத்திறன் | முடிவு | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மூலம் | திருத்தப் பட்ட | உண்மை யான |
| கடன் 3171 | 3 ஒக்ரோபர் 2014 | 5 நொவம்பர் 2014 | 7 ஜனவரி 2015 | 30 செப்ரெம்பர் 2021 | – | – |

## ■ பயன்பாடு

| திகதி | அங்கீகார இலக்கம் | ADB (US$ ஆயிரம்) | ஏனையவை (US$ ஆயிரம்) | தேறிய சதவீதம் |
|---|---|---|---|---|
| **திரண்ட ஒப்பந்த வழங்கல்** | | | | |
| 22 யூன் 2015 | கடன் 3171 | 67,423 | 0 | 74.00 |
| **திரண்ட பகிர்வுகள்** | | | | |
| 22 யூன் 2015 | கடன் 3171 | 2,600 | 0 | 3.00 |

## ■ உடன்படிக்கைகளின் நிலைமை

பின்வரும் வகைகளின் கீழ் உடன்படிக்கைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன: கணக்காய்வுகுட்படுத்தப்பட்ட கணக்குகள், நலப்பாதுகாப்புகள், சமூக பிரிவு, நிதி, பொருளாதாரம் மற்றும் ஏனையவை. பின்வரும் அளவீடுகளின் அடிப்படையில் உடன்படிக்கை இணக்கப்பாடு தரப்படுத்தப்படுகிறது: (i) திருப்தி – உச்ச அளவாக ஒரு விதிவிலக்கு அனுமதியுடன் இந்த பிரிவில் உள்ள அனைத்து உடன்படிக்கைகளும் இணங்கியுள்ளது, (ii) பகுதியளவு திருப்தி – உச்ச அளவாக இரு உடன்படிக்கைகள் பிரிவுடன் இணங்கவில்லை, (iii) அதிருப்தி – மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட உடன்படிக்கைகள் இந்த பிரிவில் இணங்கவில்லை. 2011 பொதுசன தொடர்பாடல் கொள்கையின் படி, திட்ட நிதி கூற்றுக்களுக்கான உடன்படிக்கை இணக்கப்பாட்டு தரப்படுத்தலானது 2 ஏப்ரல் 2012 இற்கு பின்னரான திட்ட பேச்சுவார்த்தைக்கு மாத்திரம் பயன்படுத்தப்படும்.

| அங்கீகார இலக்கம் | வகை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | பிரிவு | சமூகம் | நிதி | பொருளாதாரம் | ஏனையவை | நலப்பாதுகாப்பு | திட்ட நிதி கூற்றுகள் |
| கடன் 3171 | திருப்தி | திருப்தி | திருப்தி | – | திருப்தி | திருப்தி | – |

## ■ தொடர்புகள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட விபரங்கள்

| | |
|---|---|
| **பொறுப்பான ADB உத்தியோகத்தர்** | லீ மிங் நாய் (tmling@adb.org) |
| **பொறுப்பான ADB திணைக்களம்** | தெற்காசியத் திணைக்களம் |
| **பொறுப்பான ADB பிரிவுகள்** | போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் பிரிவு, SARD |
| **நிறைவேற்று முகவராண்மைகள்** | – |

## ■ தொடர்புகள்

| | |
|---|---|
| **திட்ட இணையதளம்** | http://www.adb.org/projects/47273-003/main |
| **திட்ட ஆவணங்களின் பட்டியல்** | http://www.adb.org/projects/47273-003/documents |